Pastoral Letter No/GR/39/2019

# ஆயர் திருமுகம்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

இறைமகன் ஈசோ மெசியாவை உலகுக்குத் தந்து மீட்பின் மாட்சிக்கு சாட்சியான அன்னையாம் தூய கன்னிமரியாளை, தாய்த்திருச்சபையின் மிகச்சிறந்த புனிதராகக் கத்தோலிக்கர்களாகிய நாம் ஏற்று, போற்றிப் புகழ்வது தனிச்சிறப்பெனக் கருதுகிறேன். பாலஸ்தீன நாட்டில் பிறந்த அன்னை மரியாவின் பிறந்த நாள் கொண்டாட்டம் மிகப் பழமையான ஒன்றாக இருந்தாலும், திருச்சபையில் எட்டாம் நூற்றாண்டிலிருந்து மட்டுமே செப்டம்பர் எட்டாம் நாள் அன்னையின் பிறந்த நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது.

உரோமைத் திருச்சபைக்கு இந்த எட்டு நாள் வழிபாட்டுக் கொண்டாட்டம் கிழக்கத்தியத் துறவிகளால் அறிமுகம் செய்யப்பட்டது. அதுமுதற்கொண்டு உரோமைத் திருச்சபையும் அன்னைக்குரிய இத்தவ வழிபாட்டை அன்னைக்கென அர்ப்பணித்துக் கொண்டாடி வருகின்றது. கிழக்கத்தியத் திருச்சபைகளாலும், சிரியன் திருச்சபைகளாலும் இந்நாட்கள் ஜெப தவ முயற்சிகளாகக் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது.

தூய கன்னிமரியாவின் பிறப்பு விழாவினை திருச்சபை செப்படம்பர் 1 முதல் 8-ம் தேதி வரை “எட்டு நாள் நோன்பு” என்னும் பெயரில் கொண்டாடிவருகிறது. இந்த எட்டு நாள் நோன்பு வழிபாட்டுக் கொண்டாட்டமானது கேரளாவில் அனைத்து தனிதிருச்சபைகளின் எல்லா ஆலயங்களிலும் கொண்டாடப்பட்டு வந்தாலும் கோட்டயம் மாவட்டத்திலுள்ள மணற்காடு தூய மரியன்னை பேராலயத்தில் சீரோடும் சிறப்போடும் கலை நிறை விழாவாக செப்டம்பர் ஒன்றாம் நாள் முதல் எட்டாம் நாள் வரை “எட்டு நோன்புப் பெருநாள்கள்” என்ற அருட்சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகின்றது. இப்பேராலயம் சிரியன் ஆர்த்தோடக்ஸ் திருச்சபையின் அக

உறுப்பாக உள்ளது. இந்த எட்டு நாட்களும் கேரளாவின் சிரியன் திருச்சபைகளின் மக்களும், ஆயிரகணக்கான மரியாயின் சேனை மற்றும் மாதா் ஜோதிஸ் உறுப்பினா்களும், பிற மத மக்களும் ஒன்று கூடி மரியாவின் புகழ் பாடும் விதமாக செப தவ வழிபாட்டுக் கொண்டாட்டங்களில் முழு மகிழ்வுடனும் பக்திப் பற்றுதலுடனும் ஈடுபடுவது வழக்கமாக உள்ளது.

தற்போதும் சாதி மதம் பாராது அனைத்து மக்களும் ஒன்று கூடி பல்வேறு கருத்துக்களுக்காக அன்னையின் திருமுன்னிலையில் அமா்ந்து மனமுருகி வேண்டி, தமக்கு தேவையான வரங்களைப் பெற்று வளம் காண்கின்றனா். காரணம் தன்னை அண்டி வந்து வேண்டுவோா்க்கு வேண்டும் வரங்களை தம் திருமகன் ஈசோ வழியாக பொழிபவள் அன்னை மரியாள் என்பது வெள்ளிடை மலை.

அன்பாா்ந்தவா்களே! இந்நேரம் இருபெரும் வரலாற்று உண்மைகளை உங்களோடு பகிா்ந்து கொள்ள விரும்புகிறேன். அன்னையிடம் அடைக்கலம் புகுந்தோா் கைவிடப்படாா் என்பதற்கு இந்நிகழ்வுகள் மாபெரும் சான்று என்றே உணா்கின்றேன். கி.பி. 1784-ம் ஆண்டு கேரளாவை வெற்றிக்கொள்ள எண்ணிய சுல்தானிய வம்சத்தவரான திப்பு சுல்தான் ஆலுவா என்னுமிடத்தில் காலூன்றி கிறிஸ்தவத்திற்கு எதிராகச் செயல்பட்டான். குறிப்பாக கிறிஸ்தவ பெண்கள் மீது கடுமையான கொடுஞ்செயல்களில் ஈடுபட்டான். நிலை குலைந்து போன கிறிஸ்தவ பெண்கள் அன்னை மரியிடம் அடைக்கலம் புகுந்து எட்டு நாட்கள் நோன்பிருந்து ஆலுவா ஆற்றங்கரைப் படுகையில் அமா்ந்து அன்னையிடம் முறையிட்டனா். அன்னையின் ஆற்றலால் கிறிஸ்தவத்தையும், கிறிஸ்தவ பெண்களையும் கொடுமைப்படுத்திய திப்புசுல்தான் பின் வாங்கினான். அனைத்து ஆற்றல்களையும் இழந்தான். மரணத்திற்கான எவ்வித ஆன்ம தயாரிப்பும் இல்லா நிலையில் இறந்ததாக வரலாற்று நிகழ்வு நமக்கு சான்று பகா்கின்றது. இந்நிகழ்வை நினைவு கூா்ந்து கேரளத்து மகளிா் இன்றும் அன்னை மரியாவுக்கு நன்றி நவின்று ஜெபிக்கிறாா்கள்.

மற்றுமோா் நிகழ்வு: கி.பி. ஏழாம் நூற்றாண்டில் ‘பசுரா’ என்னும் நகரின் அருகில் ‘கீரா’ என்னும் அழகிய நகரம் இருந்தது. அந்நகா் முழுவதும் கிறிஸ்தவ மக்களைக் கொண்டதாயிருந்தது. ஈராக் தலைநகா் பாக்தாத்தை ஆண்ட கலிப்பா்களால் கீரா நகரம் கைப்பற்றப்பட்டு இஸ்லாமிய ஆளுமைக்கு உட்படுத்தப்பட்டது. இஸ்லாமிய ஆளுநா் இஸ்லாமிய நலன் ஒன்றையேக் குறிக்கோளாகக் கொண்டு கிறிஸ்தவத்தையும், கற்புநெறி பிறழாமலும், ஒழுக்க வழியில் இம்மியளவும் வழுவின்றியும் வாழ்ந்த நம் கிறிஸ்தவப் பெண்களிடம் முறைதவறி மிருக வெறி கொண்டு நடக்கலானான். அச்சத்தின் விளிம்பில்

அரண்டு நின்ற கீரா நகரத்துப் பெண்கள் அங்குமிங்கும் ஓடி அன்னையின் திருவடியை நாடினர்.

எந்த தாமதமுமின்றி அங்கிருந்த அருட்பணியாளர் மூன்று நாள்கள் நோன்பை அறிவித்து அன்னை மரியிடம் மண்டியிட்டு வேண்டிடப் பணித்தார். மூன்றாம் நாள் திருப்பலியின் ஒப்புக் கொடுத்தல் வேளையில் வானத்திலிருந்து ஒளி வெள்ளம், ஆங்கோர் தூண் போல் பாய்ந்து அத்திருக்கோவில் முழுதும் ஒளியால் சூழ்ந்தது. அந்நேரம் அருட்பணியாளர் மற்றும் மக்கள் முன் அன்னை தோன்றி ‘‘அச்சம் கொள்ளாதீர்! உங்களுக்கு அமைதி உண்டாகட்டும்! மகிழ்ந்து களி கூறுங்கள்! கலினாக்களால் உங்களை அண்ட இயலாது. அவர்கள் இல்லாமல் போயினர்; உங்கள் துன்பங்கள் அழிந்தொழிந்தன’’ எனத் திருவாய் மொழிந்தது. அபலைகளாய் அன்னையை அண்டி வேண்டி நின்ற மக்கள் அன்னைக்கு கண்ணீர் கண்களோடு நன்றி செலுத்தினர். அன்றிலிருந்து செப்டம்பர் ஒன்று முதல் அன்னையின் பிறந்த நாளாம் எட்டாம் நாள் வரை நோன்பிருந்து செப, தவ, ஒறுத்தல் முயற்சிகள் செய்து காலம் காலமாகத் தொடர்ந்து அன்னைக்குப் புகழ்மாலை சூட்டிப் பணிந்து வணங்கி வருகின்றனர். மேலே கூறிய இரு நிகழ்வுகளும் அன்னையின் அரவணைப்பை உணர்த்தும் சிறு சிறு சான்றுகளே!

எனவே, அன்பார்ந்த இறைமக்களே! அன்னையின் பிறந்த நாளாகிய செப்டம்பர் 8-ஆம் நாளுக்கு, முன்தயாரிப்பாகிய இத்தவ நாட்களில் மனத்தாலும் உடலாலும் ஒறுத்தல் முயற்சிகளை மேற்கொள்வோம். மனத்தாலும், உடலாலும், ஜெபத்தாலும், தவத்தாலும் நாம் அன்னையின் ஆழ்ந்த அன்பிலும் அரவணைப்பிலும் மூழ்கி விசுவாசத்தில் நம்பிக்கைக்கொண்டு, பாரம்பரிய சடங்குகள் மற்றும் செப வழிபாடுகளில் பக்தியுடன் ஈடுபடுவோம். இந்த எட்டு தவ நோன்பு நாட்களானது நமது தேசத்தின் புனிதரான புனித தோமையாரையும் அனுதினமும் நினைவு கூரும் ஆன்மீக அருள்நிறை நாளாக அமையட்டும்.

‘‘இதோ உமது அடிமை உம் திருவுளப்படியே எனக்கு ஆகட்டும்’’ எனத் தன்னையே இறைமுன் தாழ்த்திய அன்னையின் தாழ்ச்சியை நாமும் மனதில் கொண்டு, தாழ்ச்சியுடையோராய் வாழ்வோம். அருள் நிறைந்தவளாம் அன்னையின் அருளை நாமும் அடைய அன்னையின் முன் மண்டியிட்டு, அவள் திருக்கரங்களில் அணி செய்யும் செபமாலையைத் தொடர்ந்து சொல்வோம். இந்த எட்டு நாள்களும் அவரவர் ஆலயங்களில் மரியாயின் சேனையினரும் இறைமக்கள் அனைவரும் ஒன்றுகூடி அன்னையின் பாதம் அமர்ந்து ஜெபிப்போம்.

அன்னையின் பிறந்த நாளை முன்னிட்டு செப்டம்பர் 1 ம் நாள் முதல் எட்டாம் நாள் வரை எல்லா நாட்களிலும் சிறப்புத் திருப்பலியும் எட்டுநாள் நோன்பு செபமும் நடத்த வேண்டுகிறேன். அதற்கான செபபுத்தகத்தையும் இத்திருமுகத்துடன் அனுப்புகிறேன். தொடர்ந்து உங்கள் நோன்பு நாள் மன்றாட்டுக்கள் நிறைவேற நான் செபிக்கிறேன். ஆன்மீக அருள்வாழ்விற்கு அன்னை மரியாவின் வழியான பக்தி முயற்ச்சிகள் ஆதாரமாயிருப்பது முற்றிலும் உண்மையானதால் இந்த நோன்பு நாட்களில் அனைவரும் அணி திரண்டு அன்னையிடம் செபித்து அன்னையின் அருள்வரங்களால் நிறைவுபெறுவோம். ஆன்மீக ஆற்றலைப் பெற மரியாயின் சேனை அமையப் பெறாத பங்குகளில் மரியாயின் சேனை பிரசீடியங்கள் உருவாக்கி அன்னையின் பக்தியில் உறுதிபடவும் உங்களை இவ்வேளையில் அழைக்கின்றேன்.

அன்னையின் பிறந்த நாளாகிய செப்டம்பர் 8-ஆம் நாள் ஞாயிறு அன்று காலைத் திருப்பலியைத் தொடர்ந்து மறைக்கல்விக்கு பிறகு மரியாயின் சேனையினரும் ஒவ்வொரு பங்கின் உறவியத்தாரும், உறவியத்திற்கு ஒருமணி நேரம் என ஒதுக்கீடு செய்து காலை முதல் மாலை வரை வல்லமை மிகுந்த ஜெபமாலையைத் தொடர்ந்து செபித்து இறுதியில் தூய மரியன்னையின் திருசொருபத்தைத் ஏந்தி ஆலயத்தைச் சுற்றி செபமாலை பவனி நடத்தி தூய மரியன்னைக்கு பிறந்தநாள் பரிசளிப்போம். வீடற்றோர் வீடு பெற, மழலைச் செல்வம் இல்லாதோர் மழலைச் செல்வம் பெற, தேவையில் உழல்வோர் தேவையில் நிறைவு பெற, வெளிநாடு - உள்நாடு என உழைப்போர் உழைப்பிற்கேற்ற ஊதியம் பெற, அமைதி இழந்தோர் மன அமைதி பெற, வேலை வாய்ப்பற்றோர் வேலை பெற என இன்னும் தத்தம் வாழ்வுக்குத் தேவையான அனைத்து நலன்களையும் நமது எட்டு நாள் நோன்புகளால் அன்னை நமக்கு அருள்வாராக! செபிப்போம் வளர்வோம். அன்னையின் ஆசியும் அருளும் நம்மில் என்றும் நிறையட்டும் என வாழ்த்தி செபிக்கிறேன்.

இறைவன் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் உங்கள் பணிகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்

22.08.2019

**✞ மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
தக்கலை மறைமாவட்ட ஆயர்

*குறிப்பு: இவ் ஆயர் திருமுகத்தை 25.08.2019 ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகளிலும் திருப்பலியின் போது வாசிக்க வேண்டும்.*

Bishop’s House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India